## கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, காணி மற்றும் காணி அபிவிருத்தி, திறன் மற்றும் மனிதவலு அபிவிருத்தி, மகளிர் விவகாரம் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர்

## கௌரவ டபிள்யூ.ஜீ.எம்.ஆரியவதி கலப்பதி அவர்களின்

## 2016 ஆம் நிதியாண்டிற்கான பாதீட்டுரை

கிழக்கு மாகாண சபையின் கௌரவ சபைத்தலைவர் எ.பி.கலபதிகே சந்திரதாஸ அவர்களே, கௌரவ முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமத் அவர்களே, கௌரவ அமைச்சர்களே, கௌரவ எதிர்க்கட்சி தலைவர் அவர்களே, கௌரவ மாகாண சபை உறுப்பினர்களே, கிழக்கு மாகாணத்தின் பிரதம செயலாளர் திரு.டி.எம்.சரத் அபேகுணவர்தன அவர்களே, அமைச்சுக்களின் செயலாளர்களே, பேரவையின் செயலாளர் அவர்களே, பிரதிப் பிரதம செயலாளர்களே, திணைக்களத் தலைவர்களே, திட்டமிடல் பணிப்பாளர்களே, பொறியியலாளர்களே, கணக்காளர்களே, உத்தியோகத்தர்களே மற்றும் பார்வையாளர்களே உங்கள் அனைவருக்கும் ஆயுபோவன், வணக்கம்.

கிழக்கு மாகாண சபையின் வீதி அபிவிருத்தி,காணி மற்றும் காணி அபிவிருத்தி, திறன் மற்றும் மனிதவலு அபிவிருத்தி,மகளிர் விவகாரம்மற்றும் நீர்வழங்கல் அமைச்சின் 2016 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை இச்சபைக்கு சமர்ப்பிப்பதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

வீதி அபிவிருத்தி,காணி அபிவிருத்தி, திறன் மற்றும் மனிதவலு அபிவிருத்தி,மகளிர் விவகாரம்மற்றும் கிராமிய நீர்வழங்கல் ஆகிய ஐந்து (05) முக்கிய துறைகள் எமது அமைச்சின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவற்றில் வீதி அபிவிருத்தி மற்றும் காணி அபிவிருத்தி ஆகிய துறைகளுக்கு வெவ்வேறாக தனித்தனி திணைக்களங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இருந்த போதும் இத்துறைகள் எமது அமைச்சின் கீழ் நேரடியாக செயற்பட்டு வருகின்றன.

இவ்வமைச்சுக்கும், இவ்வமைச்சின் கீழுள்ள திணைக்களங்களுக்கும் 2015 ஆம் ஆண்டில் மீண்டெழும் செலவீனம், மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை (PSDG), பிரமாண அடிப்படையிலான நன்கொடை (CBG) மற்றும் மாகாணசபை உறுப்பினர்களின் நிதி (Members Fund) போன்ற மாகாண மூலதன ஒதுக்கீடுகள் ஊடாகவும், உலகவங்கி (World Bank) போன்ற நிதிமூலங்கள் ஊடாகவும் ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெற்று செயற்றிட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களின் அநுகூலங்கள் அனைத்தினையும் இம்மாகாணத்தின் மூவின மக்களும் நேரடியாக அனுபவித்து வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மாகாண நிதிமூலங்களைப் பயன்படுத்தி எமது அமைச்சின் ஊடாகவும், அமைச்சின் கீழ்வருகின்ற நிறுவனங்கள் ஊடாகவும் அபிவிருத்தித் திட்டங்கள் யாவும் இவ்வாண்டில் மிக வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு, பூர்த்தியாகும் நிலையில் உள்ளன என்பதை இச்சபைக்குத் தெரிவிக்க விரும்புகின்றேன். எமது அமைச்சினால் முன்னெடுக்கப்படுகின்ற வேலைத்திட்டங்கள் யாவும் கிழக்கு மாகாணத்திலுள்ள மூன்று மாவட்டங்களையும் ஒருங்கிணைத்து வடிவமைக்கப்படுவதுடன் பாரபட்சமற்ற முறையிலேயே அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

2015 ஆம் ஆண்டில் கிழக்கின் அபிவிருத்திக்காக நிதி வழங்கிய அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களுக்கும், கிழக்கு மாகாண ஆளுனர் கௌரவ ஒஸ்டின் பெர்னாண்டோ அவர்களுக்கும் கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் கௌரவ ஹாபிஸ் நசீர் அஹமத் அவர்களுக்கும், கௌரவ சபைத்தலைவர் எ.பி.கலபதிகே சந்திரதாஸ அவர்களுக்கும், கௌரவ அமைச்சர்களுக்கும், கௌரவ எதிர்க்கட்சி தலைவர் அவர்களுக்கும் மற்றும் மாகாணசபை கௌரவ உறுப்பினர்களுக்கும் கிழக்கு மாகாண மக்கள் சார்பில் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கிழக்கு மாகாண சபையின் வீதி அபிவிருத்தி, காணி மற்றும் காணி அபிவிருத்தி, திறன் மற்றும் மனிதவலு அபிவிருத்தி, மகளிர் விவகாரம் மற்றும் நீர்வழங்கல் அமைச்சின் ஊடாக கிழக்கு மாகாண அபிவிருத்திக்காக செயல்படுத்திய செயற்றிட்டங்களினூடாக சகல துறைகளும் அபிவிருத்தி அடைவதற்கு, எனக்கும் எமது அமைச்சிற்கும் ஒத்துழைப்பு வழங்கி, கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி,காணி மற்றும் காணி அபிவிருத்தி, திறன் மற்றும் மனிதவலு அபிவிருத்தி,மகளிர் விவகாரம்மற்றும் நீர்வழங்கல் ஊடாக வாழ்வாதார அபிவிருத்தியுடன் தொடர்புடைய அனைத்து விடயங்களுக்கும் உதவிய சகலருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது அமைச்சின் நேரடி நிர்வாகத்தின் கீழ் இயங்குகின்ற முக்கியமான மூன்று துறைகள் நீர்வழங்கல், மகளிர் விவகாரம், திறன் மற்றும் மனிதவலு அபிவிருத்தி போன்றனவாகும். கிழக்கு மாகாணத்தில் குடிநீரற்ற பிரதேசங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியினைக் கொண்டு மிகவும் பொருத்தமான இடங்களில் பாதுகாப்பான குடிநீர் கிணறுகளை அமைத்து எமது மாகாணத்தில் குடிநீரின்றி கஷ்டப்பட்ட மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வசதிகளை இவ்வமைச்சு வழங்கி வருகின்றது.

எமது அமைச்சின் கீழ் இயங்கி வரும் மற்றுமொறு துறையாக மகளிர் விவகார அபிவிருத்தி காணப்படுகின்றது. இதன் மூலம் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு வாழ்வாதார தேவையினைப் பூர்த்தி செய்யும் முகமாக தையல் பயிற்சி நிலையம் ஒன்றினை அமைப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மேலும், வறுமைக் கோட்டிற்கு கீழ் காணப்படும் பெண்களின் தேவையினைக் கண்டறிந்து அவர்களுக்கான சுயதொழில் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கும் நடவடிக்கைகள் எமது அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றது என்பதனை பெருமிதத்துடன் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும் உள்ள வேலை வாய்ப்பற்ற இளைஞர் யுவதிகளின் திறன்களை விருத்தி செய்யும் நோக்கில் எமது அமைச்சின் திறன் மற்றும் மனித வலு அபிவிருத்தித் துறை இயங்கி வருகின்றது. இதன் மூலம் பயிற்சி பெறும் இளைஞர் யுவதிகள் சுயதொழில் ஒன்றை தாமாக ஆரம்பிப்பதற்கான இயலுமையினைப் பெற்று கிழக்கு மாகாண அபிவிருத்திக்கு பங்காற்றுகின்றனர் என்பதனை இவ்விடத்தில் கூறிக்கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

கிழக்கு மாகாணத்தில் கூட்டங்கள் மற்றும் நடமாடும் சேவைகள் நடாத்தப்பட்டு,சேதமடைந்த வீதிகள் அடையாளப்படுத்தப்பட்டதுடன், காணிகள் தொடர்பான பிரச்சனைகள் இனங்காணப்பட்டு அவற்றுக்கான தீர்வுகளை முன்னெடுக்கும் வழிமுறைகளை எமது அமைச்சின் திணைக்களங்கள் மேற்கொண்டு வருகின்றன என்பதனையும் இச்சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

## வீதி அபிவிருத்தித் திணைக்களம்

எமது அமைச்சின் கீழ் இயங்கி வருகின்ற வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் ஊடாக மாகாண வீதிகள், கிராமிய வீதிகள் என்பன, பல அபிவிருத்தித் திட்டங்கள் ஊடாக புனரமைக்கப்பட்டு மக்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்டு வருகின்றன. இவ்வபிவிருத்தித் திட்டங்கள் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை(PSDG), பிரமாண அடிப்படையிலான நன்கொடை (CBG) மற்றும் பல்வேறுவிசேட அபிவிருத்தித் திட்டங்களினூடாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிர்மாண வேலைகளின் மூலம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட வீதிகள் புனரமைக்கப்பட்டு, கிழக்கு மாகாண மக்களினது போக்குவரத்து வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளதுடன், நீண்ட காலப் பாவனைக்கு உகந்த வகையிலும் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன. இது கிழக்கு மாகாண மக்களின் வருமானத்தை உயர்த்தி வாழ்க்கைத்தரத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கையினை உருவாக்கியுள்ளது என்பதனையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கீழ்க்குறிப்பிடும் விசேட அபிவிருத்தித் திட்டமான உலக வங்கி நிதியுதவி ஊடாக வீதி அபிவிருத்தித் திட்டம் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினால் செயற்படுத்தப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட்டு வருகின்றன.

- **உலக வங்கி நிதியுதவி ஊடாக வீதி அபிவிருத்தித் திட்டம்**

கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் சேதமடைந்ததென இனங்காணப்பட்ட சுமார் 56.15 கிலோமீட்டர் நீளமான வீதிகள் உலகவங்கியின் நிதியுதவியுடன் ஏறத்தாழ 2,259.0 மில்லியன் ரூபா செலவின் கீழ், வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் ஊடாக புனர்நிர்மாணம் செய்யப்பட்டு இவ்வருடத்தில் முடிவடைந்துள்ளது.

## காணி, காணி நிர்வாகத் திணைக்களம்

எமது அமைச்சின் கீழ் இயங்கி வருகின்ற காணி நிர்வாகத் திணைக்களத்தின் ஊடாக மூன்று மாவட்டங்களிலும் குடியேற்றத் திட்டங்களை நிர்வகிப்பதும் மற்றும் முகாமைத்துவம் செய்தும் வருகின்றது.

அதாவது கிழக்கு மாகாண சபைக்குரிய காணிகளை காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் காணிக்கச்சேரிகள் மூலம் கையளிப்பதற்கான அனுமதியை வழங்குதலும், இவ்வாறு கையளிக்கப்பட்ட காணிகளுக்கு காணி அனுமதிப்பத்திரங்களையும், அளிப்புப்பத்திரங்களையும் வழங்கி வருகின்றது. அத்துடன், நிபந்தனைகளை மீறும் காணி அனுமதிப்பத்திரங்கள், அளிப்புப் பத்திரங்களை இரத்துச்செய்யும் அதிகாரமும் காணி நிர்வாகத் திணைக்களத்திடம் காணப்படுகின்றது என்பதனை விசேடமாக கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

மேலும்,அரச காணிச் சட்டத்தின் கீழ் அமைச்சுக்கள், திணைக்களங்கள், சபைகள், கூட்டுத்தாபனங்கள், வங்கிகள், தொழில் முயற்சிகளை ஆரம்பிக்கும் தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு அரச காணிணை வழங்குதலும், அரச காணிச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் காணிகளிலிருந்து அரசுக்குச் சேர வேண்டிய வருமானத்தினை சேகரிப்பதன் மூலமாக அரச இறையை அதிகரிப்பிற்கு முக்கிய பங்காற்றி வருகின்றது என்பதனை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இவற்றைத் தவிர அரசின் குடியேற்றத் திட்டங்களில் மிக முக்கியமான உட்கட்டமைப்பு வசதிகளையும் மேம்படுத்தி வருகின்றது என்பதனை இவ்விடத்தில் கூறிக்கொள்வதில் பெருமிதம் கொள்கின்றேன்.

# 2015 ஆம் ஆண்டின் முன்னேற்றப் பணிகள்

## அமைச்சின் முன்னேற்றப் பணிகள்

2015 ஆம் ஆண்டிற்காக எமது அமைச்சிற்கான நிதி ஒதுக்கீடுகளாக ரூபா 85.98 மில்லியன் கிடைக்கப் பெற்றுள்ளது. ரூபா 27.01 மில்லியன் மூலதனச் செலவினமாகவும்,ரூபா 58.97 மில்லியன் மீண்டெழும் செலவினங்களுக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது. மூலதனச் செலவின விபரம் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

| துறைகள் | CBG (ரூபா மில்லியன்) | வேறு வருமானம் (ரூபா மில்லியன்) | மொத்தம் |
|---|---|---|---|
| அமைச்சு | 15.0 | - | 15.0 |
| மகளிர் விவகாரம் | 2.0 | - | 2.0 |
| மகளிர் தையல் நிலையம் | - | 4.5 | 4.5 |
| நீர்வழங்கல் | 2.0 | - | 2.0 |
| திறன் மற்றும் மனிதவலு | 2.0 | - | 2.0 |
| மாகாண சபை உறுப்பினர் நிதி | 1.51 | - | 1.51 |
| **மொத்தம்** | **22.51** | **4.5** | **27.01** |

அமைச்சின் நேரடி நிர்வாகத்தின் கீழ் இயங்கும் நீர்வழங்கல்,மகளிர் விவகாரம், திறன் மற்றும் மனிதவலு அபிவிருத்தி துறைகளினூடாக வறுமை நிலையில் வாழும் மக்களின் அடிப்படை தேவைகளை இனங்கண்டு, அமைச்சுக்கு வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டுக்கமைவாக திட்டங்கள் இனங்காணப்பட்டு முன்னுரிமை அடிப்படையில் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன.

மாகாண சபையின் நிதியில் இத்துறைகளுக்கு வழங்கப்படும் நிதி ஒதுக்கீடானது மிகக் குறைந்தளவாக காணப்பட்டாலும், கிடைக்கப்பெறும் ஒதுக்கீட்டினைக் கொண்டு கிழக்கு மாகாண மக்களில், மிகவும் பின்தங்கிய மற்றும் பெண்கள் தலைமை தாங்கும் நிலையில் உள்ள குடும்பங்களை இனங்கண்டு அவர்களுக்கான குடிநீர் வசதி,மனிதவலு அபிவிருத்தி போன்ற அடிப்படை வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதற்கான செயற்பாடுகள் அமைச்சினூடாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

எமது அமைச்சினூடாக மேற்கொள்ளப்படும் திட்டங்கள் இம் மூன்று துறைகளையும் பொறுத்தவரையில், மிக முக்கியமானதும் மக்களின் பிரதானதேவையினை பூர்த்தி செய்வதற்குமான நடவடிக்கைகளையும் கொண்டிருக்கின்றன.

## 1. நீர்வழங்கல் துறை

நீர்வழங்கல் துறையானது எமது அமைச்சின் முக்கியமான துறையாகக் காணப்படுகின்றது. கிழக்கு மாகாண மக்களின் பாதுகாப்பான குடிநீர் தேவையினை பூர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டு எமது அமைச்சின் கீழ் இத்துறையானது செயற்பட்டு வருகின்றது.

2015 ஆம் ஆண்டில் இத்துறைக்கு பிரமாண அடிப்படையிலான நன்கொடை (CBG) நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 1.35 மில்லியன் ரூபாஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. கடந்த வருடங்களைக் காட்டிலும் மிகக் குறைந்தளவே இவ்வருடம் நீர்வழங்கல் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இதனைக் கொண்டு 27 குடிநீர்க் கிணறுகள் மாகாணத்தின் மூன்று மாவட்டத்திலும் கட்டி முடிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். மேற்படி ஒதுக்கீடானது மூன்று மாவட்டங்களிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு குடிநீர் கிணறுகளை அமைக்கும் பொருட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டில் மக்களுக்கு வழங்கப்பட்ட குடிநீர் கிணறுகளின் விபரம் மாவட்ட அடிப்படையில் கீழே தரப்பட்டுள்ளது.

| மாவட்டம் | அலகொன்றுக்கான தொகை (ரூபா) | கிணறுகளின் எண்ணிக்கை | மொத்த ஒதுக்கீடு (ரூபா) |
|---|---|---|---|
| அம்பாறை | 50,000.00 | 6 | 300,000.00 |
| மட்டக்களப்பு | 50,000.00 | 4 | 200,000.00 |
| திருகோணமலை | 50,000.00 | 17 | 850,000.00 |
| **மொத்தம்** | | **27** | **1,350,000.00** |

### 1.1 மாகாண சபை உறுப்பினர்களின் நிதி ஒதுக்கீடு

கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் 2015 ஆம் ஆண்டில் வீதி அபிவிருத்தி அமைச்சானது 11 நீர் வழங்கல் வேலைத்திட்டத்தை வறுமைக்கோட்டின் கீழ் வாழும் சமுர்த்தி உதவி பெறும் மூவின மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் தேவையினைபூர்த்தி செய்யும்நோக்குடன் அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் மத்திய அரசின் நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச்சபையுடன் இணைந்து நீர்வழங்கல் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

| மாவட்டம் | பயனாளிகளின் எண்ணிக்கை | ஒதுக்கீடு | செலவீனம் | முடிவடைந்த திட்டம் | நடைபெற்றுக் கொண்டிருக்கும் திட்டம் |
|---|---|---|---|---|---|
| அம்பாறை | 98 | 928,000.00 | 908,272.00 | 4 | 3 |
| திருகோணமலை | 81 | 577,312.00 | 323,423.00 | 2 | 2 |
| **மொத்தம்** | **179** | **1,505,312.00** | **1,231,695.00** | **6** | **5** |

## 2. மகளிர் விவகாரம்

அமைச்சின் மிக முக்கியமானதொரு துறையாக மகளிர் விவகாரம்அமைந்துள்ளதுடன், மத்திய அரசுடன் இணைந்து மகளிர் அபிவிருத்திவேலைத் திட்டங்களை கிழக்கு மாகாணத்தில் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

2015 ஆம் ஆண்டில் இத்துறைக்கு பிரமாண அடிப்படையிலான நன்கொடை (CBG) நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2.0 மில்லியன் ரூபாஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. இவ் ஆண்டிற்கான நிதியினைக் கொண்டு திருகோணமலை மாவட்டத்தில் அமையவிருக்கும் மகளிர் தையல் நிலையத்திற்கு தேவையான தையல் இயந்திரத்தினைக் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், எமது வேண்டுகோளிற்கிணங்க 4.5மில்லியன் ரூபாவினைக் கொண்டு திருகோணமலை மாவட்டத்தில் மகளிர் தையல் நிலையம் ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## 3. திறன் மற்றும் மனிதவலு அபிவிருத்தி

எமது அமைச்சின் கீழ்மேற்கொள்ளப்பட்டு வரும் மூன்றாவது துறையாக திறன் மற்றும் மனிதவலு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2015 ஆம் ஆண்டில் இத்துறைக்கு பிரமாண அடிப்படையிலான நன்கொடை (CBG) நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2.0 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந் நிதியினைக் கொண்டு மூன்று மாவட்டங்களிலும் பனை அபிவிருத்தி சபையின் ஊடாக மூன்று மாதகால பனைக் கைத்தொழில் பயிற்சி நெறியினை மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்று வருகின்றன.

மேலும், தையல் பயிற்சி நெறியினை சமூக சேவைகள் திணைக்களம் ஊடாக மூன்று மாவட்டங்களிலும் உள்ள பெண் தலைமை தாங்கும் குடும்ப பெண்களிற்கும் மற்றும் வேலைவாய்ப்பற்ற யுவதிகளுக்கும் ஒரு மாதகால தையல் பயிற்சி நெறியினை வழங்கி வருகின்றோம் என்பதனை தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

## 4. அமைச்சின் விசேட அபிவிருத்தித் திட்டங்கள்

அமைச்சின் விசேட அபிவிருத்திப் பணிக்காக 2015 ஆம் ஆண்டில் இத்துறைக்கு பிரமாண அடிப்படையிலான நன்கொடை (CBG) நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 10.0 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இந் நிதியின் செலவீன விபரங்கள் பின்வருமாறு.

| தொ. இல | விபரம் | ஒதுக்கீடு | செலவீனம் |
|---|---|---|---|
| 1 | சமூதாய அபிவிருத்தி திட்டம் | 4,650,000.00 | 3,552,000.00 |
| 2 | கலாச்சார அபிவிருத்தி திட்டம் | 1,500,000.00 | 1,493,000.00 |
| 3 | பாடசாலை அபிவிருத்தி திட்டம் | 1,700,000.00 | 1,074,000.00 |
| 4 | சுய தொழில் அபிவிருத்தி திட்டம் | 950,000.00 | 950,000.00 |
| 5 | வீதி அபிவிருத்தி திட்டம் | 1,200,000.00 | 972,000.00 |
| **மொத்தம்** | | 10,000,000.00 | 8,041,00.00 |

# வீதி அபிவிருத்தித் திணைக்களம்

இவ்வமைச்சின் கீழுள்ள முக்கியமானதொரு திணைக்களமாக வீதி அபிவிருத்தி திணைக்களம் காணப்படுகின்றது. கிழக்கு மாகாணத்தில் இத்திணைக்களத்திற்குச் சொந்தமாக 1,098.21 கிலோமீற்றர் வீதிகள் உள்ளன.

இதில் திருகோணமலை,மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் முறையே 301.50 கிலோமீற்றர்,385.53 கிலோமீற்றர், 411.18 கிலோமீற்றர் நீளமான C,D தரங்களை கொண்ட வீதிகள் காணப்படுகின்றன.

**<u>2015 ஆம் ஆண்டு இத்திணைக்களத்திற்கெனஒதுக்கப்பட்ட நிதி மூலங்கள்</u>**

- மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதி (PSDG)
- பிரமாண அடிப்படையிலான நன்கொடை (CBG)
- மீண்டெழும் வீதிப் பராமரிப்புக்கான ஒதுக்கீடு (Recurrent)
- உலகவங்கி (World Bank)
-

2015 ஆம் ஆண்டிற்காக வீதி அபிவிருத்தித் திணைக்களத்திற்கு நிதி ஒதுக்கீடுகளாக ரூபா 237.5 மில்லியன் கிடைக்கப் பெற்றுள்ளது. ரூபா 74 மில்லியன் மூலதனச் செலவினமாகவும் ரூபா 163.5 மில்லியன் மீண்டெழும் செலவினங்களுக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

## 1. மாகாணங்களுக்கிடையேயான குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை (PSDG)

மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதி (PSDG) மூலத்தின் கீழ் இத்திணைக்களத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி மொத்தம் ரூபா. 70.0 மில்லியன் ஆகும்.

இவ்வருடம் கடந்த வருடத்திற்கான கொடுப்பனவுகள் மற்றும் தொடர் வேலைகள் எதுவும் இல்லாத காரணத்தினால் 70 மில்லியன் ரூபாவிற்கும் புதிய வேலைகள் செய்யப்படுகின்றன.இந்நிதியானது மூன்று மாவட்டங்களிலும் உள்ள 21 வீதிகளை புனரமைப்பதற்கும் ஒதுக்கப்பட்டு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

**இத்திட்டத்தின் கீழ் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு வருகின்ற மேற்படி வேலைகள் தொடர்பான முன்னேற்ற விபரம் பின்வருமாறு.**

| மாவட்டம் | ஒதுக்கீடு (ரூபா மில்லியன்) | விடுவிக்கப்பட்ட கட்டுநிதி (ரூபா மில்லியன்) | இதுவரை ஏற்பட்ட செலவினம் (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|
| மட்டக்களப்பு | 24.00 | 6.26 | 6.26 |
| அம்பாறை | 24.00 | 13.69 | 13.26 |
| திருகோணமலை | 22.00 | 7.00 | 4.82 |
| **மொத்தம்** | **70** | **26.95** | **24.34** |

மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதி (PSDG) மூலத்தின் கீழ் மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் அபிவிருத்தி செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் வீதிகள் தொடர்பான அட்டவணை பின்வருமாறு.

**அம்பாறை**

| வீதியின் பெயர் | வீதியின் மொத்த நீளம் (km) | ஒப்பந்த தொகை (ரூபா மில்லியனில்) வரி தவிர்ந்தது | செலவினம் (நவம்பர் 2015 வரை) - (ரூபா மில்லியனில்) |
|---|---|---|---|
| இறக்காமம் வரிப்பொத்தான்சேனை வீதி | 0.5 | 3.00 | 1.68 |
| வடிகான் திருத்தம் மூங்கிலடி வீதி, சம்மாந்துறை | 0.5 | 4.00 | 3.17 |
| பாடசாலை, கூட்டுறவு வீதி, தமண | 0.2 | 2.00 | 0.69 |
| அன்னமலை நாவிதன்வெளி வீதி | 0.1 | 1.50 | 1.16 |
| வடிகான் திருத்தம், மத்திய வீதி, நிந்தவூர் | 0.2 | 3.00 | 0.56 |
| தமண பதகொட பல்லனோயா வீதி திருத்தம் | 0.3 | 3.00 | 1.86 |

| | | | |
|---|---|---|---|
| வடிகான் நிர்மாணம் உடையார் வீதி, கல்முனை | 0.075 | 1.5 | 1.18 |
| லிகினியாகம விஜேபுர வீதி, தெகியத்த கண்டிய | 0.2 | 2.00 | 1.21 |
| வடிகான் நிர்மாண வேலை (கடற்கரை வீதி) கல்முனை | 0.140 | 2.00 | 0.72 |
| சேனகம வீதி திருத்தம், உஹண | 2.6 | 1.00 | 0.39 |
| பரகேகல ஹிமிதுரவெவ வீதி திருத்தம் | 3.6 | 1.00 | 0.64 |
| **மொத்தம்** | **8.415** | **24** | **13.26** |

**மட்டக்களப்பு**

| **வீதியின் பெயர்** | **வீதியின் மொத்த நீளம் (km)** | **ஒப்பந்த தொகை (ரூபா மில்லியனில்)** | **செலவினம் (நவம்பர் 2015 வரை) - (ரூபா மில்லியனில்)** |
|---|---|---|---|
| வந்தாறுமூலை அடைவு வீதி, செங்கலடி | 1.15 | 1.8 | 1.25 |
| ஏறாவூர் புன்னைக்குடா வீதி புனர் நிர்மாணம் | 1.00 | 5.4 | 0.88 |
| போரதீவு,பழுகாகம், தும்பங்கேணி வீதி திருத்தம் (பழுதடைந்துள்ள பாகங்கள்) | 5.81 | 2.4 | 0.46 |
| மீள் நிர்மாணம் மீராவோடை, கிண்ணியடி பாலம் (Culvert) | 0 | 1.8 | 0.51 |
| ரோபேட்சன் வீதி | 2.00 | 5.00 | 2.97 |
| களுவாஞ்சிக்குடி,குறுமண்வெளி பாதை (Ferry) வீதி | 0.13 | 1.8 | 0.19 |
| மீன்பிடி வீதி, காத்தான்குடி திருத்தம் | 0.15 | 1.8 | 0.00 |
| குறிஞ்சாமுனை வீதி, உன்னிச்சை | 0.3 | 4.0 | 0.00 |
| **மொத்தம்** | **10.54** | **24** | **6.26** |

**திருகோணமலை**

| வீதியின் பெயர் | வீதியின் மொத்த நீளம் (km) | ஒப்பந்த தொகை (ரூபா மில்லியனில்) | செலவினம் (நவம்பர் 2015 வரை) - (ரூபா மில்லியனில்) |
|---|---|---|---|
| கந்தளாய் வானல வீதி | 1.4 | 7.00 | 4.82 |
| வானல ஆயிலியடி வீதி - கந்தளாய் | 2.5 | 15.00 | - |
| **மொத்தம்** | **3.9** | **22** | **4.82** |

**2. பிரமாண அடிப்படையிலான நன்கொடை (CBG)**

பிரமாண அடிப்படையிலான நன்கொடை (CBG) நிதி மூலத்தின் கீழ் மொத்தம் 4.0 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, இதில் 1.5 மில்லியன் ரூபா கட்டுநிதி விடுவிக்கப்பட்டுள்ளது. கடந்த வருடத்தின் தொடர் வேலையான மூதூர் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் வீதி அபிவிருத்தித் திணைக்கள உபஅலுவலக கட்டட பணிக்காக கிடைக்கப்பெற்ற கட்டுநிதியினை மாகாணப் பணிப்பாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களத்திற்கு விடுவிப்பு செய்யப்பட்டு கட்டட வேலைகள் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டு வருகின்றன.

**3. மீண்டெழும் வீதிப் பராமரிப்புக்கான ஒதுக்கீடு (Recurrent Road Maintenance) :**

இவ்வருடம் இத்திணைக்களத்திற்கு மீண்டெழும் வீதிப்பராமரிப்புக்காக 115.00 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதியினை எமது பிராந்திய அலுவலகங்களிடையே பின்வருமாறு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

| மாவட்டம் | ஒதுக்கீடு (ரூபா மில்லியன்) | இதுவரை ஏற்பட்ட செலவினம் (ரூபா மில்லியன்) |
|---|---|---|
| மட்டக்களப்பு | 32.00 | 12.41 |
| அம்பாறை | 33.00 | 26.07 |
| திருகோணமலை | 50.00 | 20.84 |
| **மொத்தம்** | **115.00** | **59.32** |

பிராந்தியங்களிடையே இனங்காணப்பட்ட சேதமடைந்துள்ள வீதிகள் இந்நிதியின் மூலம் செப்பனிடப்பட்டும் பராமரிக்கப்பட்டும் வருகின்றன.

## 5. உலக வங்கி

அம்பாறை மாவட்டத்தில் உலக வங்கி நிதி உதவியின் கீழ் 2,259 மில்லியன் ரூபா செலவில் 56.15 கிலோமீற்றர் நீளமான வீதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டு வேலைகள் யாவும் பூர்த்தியான நிலையில் மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டு வருகின்றன.

2015ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கென,

- வெளிநாட்டு நிதி –247 மில்லியன் ரூபா
- வெளிநாட்டு நிதியின் செலவீட்டுக்கான உள்நாட்டு நிதி–10.0 மில்லியன் ரூபா
- மீளளிக்கத்தக்க வெளிநாட்டு நிதி–10.0 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு வீதி புனர்நிர்மாணத்திற்கென ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து,

- வெளிநாட்டு நிதி–187.72மில்லியன் ரூபா
- வெளிநாட்டு நிதியின் செலவீட்டுக்கான உள்நாட்டு நிதி – 3.76 மில்லியன் ரூபா
- மீளளிக்கத்தக்க வெளிநாட்டு நிதி - 3.67 மில்லியன் ரூபாவும் உலக வங்கித் திட்டத்திற்கான பணிமனையால் செலவிடப்பட்டுள்ளது

**உலக வங்கியினால் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட வீதிகள் தொடர்பான விபரங்கள்**

| தொ. இல. | பொதி | மொத்த நீளம் (Km) | வீதியின் பெயர் | பிரதேச செயலகப்பிரிவு | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | தற்போதைய நிலவரம்(ஒக்டோபர் 2015 வரை) – வீதம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | EP 01 | 9.55 | நற்பிட்டிமுனை பாண்டிருப்பு எல்லை வீதி | கல்முனை | 417.90 | 100 |
| 02 | | | திரௌபதி அம்மன் கோவில் வீதி | கல்முனை | | 100 |
| 03 | | | சாய்ந்தமருது கல்முனைக்குடி எல்லை வீதி | கல்முனை | | 100 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 04 | | | மல்வத்தை சுரிப்போடை வீதி | சம்மாந்துறை | | 100 |
| 05 | EP 02 | 9.00 | மணல் ஹிஜ்ரா வீதி | பொத்துவில் | 391.84 | 100 |
| 06 | | | விளினையடி வீதி | சம்மாந்துறை | | 100 |
| 07 | | | மத்திய வீதி நிந்தவூர் | நிந்தவூர் | | 100 |
| 08 | | | காரைதீவு கிராமிய வீதி | காரைதீவு | | 100 |
| 09 | EP 04 | 23.00 | தமண – அம்பலனோயா – பன்னலகம வீதி | தமண | 433.58 | 100 |
| 10 | EP 05 | 9.60 | உப்புக்கரச்சி காதிரியா தோட்டம் கடற்கரைவீதி தெற்கு வீதி | அக்கரைப்பற்று | 377.13 | 100 |
| 11 | EP 07 | 5.00 | முதலியார் வீதி-அக்கரைப்பற்று | அக்கரைப்பற்று | 261.14 | 100 |
| 12 | EP 08 | 3.2 | மீராவோடை இணைப்பு வீதி | அக்கரைப்பற்று | 160.65 | 100 |

கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் காணப்படும் சேதமடைந்த வீதிகள் உலகவங்கி நிதி உதவியுடன் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளன. இதுவரை ஆறு பொதிகளில் உள்ள அனைத்து வீதிகளும் திருப்திகரமான முறையில் பூர்த்தியடைந்துள்ளன. இதன்மூலம் அப்பிரதேச மக்கள் நன்மை அடைவார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன்.

# காணி நிர்வாகத் திணைக்களம்

**2015 ஆம் ஆண்டிற்கான செலவினங்கள்**

2015 ஆம் ஆண்டிற்காக மாகாண காணி நிர்வாகத் திணைக்களத்திற்கு நிதி ஒதுக்கீடுகளாக ரூபா 83.37 மில்லியன் கிடைக்கப் பெற்றுள்ளது. ரூபா 7.5 மில்லியன் மூலதனச் செலவினமாகவும் ரூபா 75.87 மில்லியன் மீண்டெழும் செலவினங்களுக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

**மூலதனச் செலவினம் (5.25 மில்லியன் )**

2015 ஆம் ஆண்டு மூலதனச் செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்ட உண்மைத்தொகை ரூபா 5.25 மில்லியன் ஆகும். அதில் ரூபா 2.75 மில்லியன் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திச் செலவினங்களுக்காகவும் மிகுதி ரூபா 2.5 மில்லியன் பிரமாண அடிப்படையிலான செலவினங்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

**மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி கொடை(2.75 மில்லியன்)**

| செலவுத் தலைப்பு | 2015மதிப்பீடுசெய்யப்பட்ட அளவு (ஆயிரத்தில்) | 2015செலவினங்கள் (நவம்பர் வரை) ஆயிரத்தில் |
|---|---|---|
| காணி தொடர்பான ஆவணச் செயற்பாடுகள் | 750,000.00 | 721,755.00 |
| காட்சிப் பலகை தயாரித்தல் (அரச காணிகள் தொடர்பாக) | 2,000,000.00 | 1,875,000.00 |
| **மொத்தம்** | **2,750,000.00** | **2,596,755.00** |

பிரமாண அடிப்படையிலான செலவினக் கொடை( 2.5 மில்லியன்)

| செலவினத் தலைப்பு | 2015மதிப்பீடுசெய்யப்பட்ட அளவு (ஆயிரத்தில்) | 2015 செலவினங்கள் (ஆயிரத்தில்) |
|---|---|---|
| வாகனங்கள் | 2,000,000.00 | 1,743,000.00 |
| அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் | 500,000.00 | 478,000.00 |
| **மொத்தம்** | **2,500,000.00** | **2,221,000.00** |

**வருமானம் பெறுகைகள்**

யுத்தம் ஏற்பட்ட காலத்தில் திணைக்களத்தின் வருமானம் சேகரித்தல் நடவடிக்கைகள் சரியாக இடம்பெறவில்லை. யுத்தம் முடிவுற்றதும் காணி நிர்வாக நடவடிக்கைகள் திருப்திகரமான வகையில் நடைமுறைக்குச் சாத்தியமாக வந்தது. பிரதேச செயலகங்களில் காணி நிர்வாகச் செயற்பாட்டின் தன்மைகள் வளர்ச்சியடைந்ததன் காரணமாக வருமானச் சேகரிப்புச் செயற்பாடுகள் விரைவாகவும் மற்றும் அதிகளவிலும் வளர்ச்சியடைந்தது.

அத்துடன் புதிய அளிப்பு ஆவணங்கள் மற்றும் அனுமதிப் பத்திரங்கள் வழங்கும் நடவடிக்கைகள் குறிப்பிட்டளவு அதிகரித்தது. வெளிமாவட்ட முதலீட்டாளர்களுக்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் காணி வழங்கும் நடவடிக்கைகள் அதிகரித்ததன் காரணமாக புதியதொரு தாற்பரியம் உருவாகியது. ஏனைய வருமானங்களை விடவும் இந்த வருமானங்கள் அதிகரித்ததன் காரணமாக நாம் புதிய திட்டங்களை அமுல்படுத்த எதிரபார்த்துள்ளோம்.

**பின்வரும் துறைகளிலிருந்து குறைந்த அளவிலேயே வருமானம் பெறப்படுகின்றது.**

1. தொடர்பாடல் கோபுரங்களை அமைப்பதற்கென நீண்ட கால குத்தகை வழங்குதல்.
2. கரவலை தொடர்பாக அறவிடப்படும் அறவீடுகள்.
3. கனிமங்கள் அகழ்விற்கு அறவீடுகள் மேற்கொள்ளல். (பாறைகள், மண் அகழ்தல்)

குத்தகைகள் உரிய வேளையில் செலுத்தப்படாமை காரணமாக 2015ம் ஆண்டில் வருமானம் குறைவடைந்துள்ளது. அவற்றை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

**சேகரிக்கப்பட்ட குத்தகை பற்றிய விபரங்கள் வருமாறு.**

| இல | ஆண்டு | திருகோணமலை | மட்டக்களப்பு | அம்பாறை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2011 | 23,987,866.29 | 5,896,776.69 | 1,659,155.50 | 31,543,798.48 |
| 2 | 2012 | 112,033.00 | 9,019,791.00 | 742,175.00 | 9,873,999.00 |
| 3 | 2013 | 8,176,816.90 | 3,092,659.65 | 918,875.30 | 13,027,678.85 |
| 4 | 2014 | 47.425.457.72 | 23.455.380.27 | 3.268.551.50 | 53.786.668.87 |
| 5 | 2015 | 6.701.207.20 | 2,031,237.00 | 1,023,751.70 | 9,756,195.90 |
| **மொத்தம்** | | **86,403,381.11** | **43,495,844.61** | **7,612,509.00** | **137,511,734.72** |

**காணி முகாமைத்துவ செயற்பாடுகள்**

**ரன்விம அளிப்பு பத்திரம் வழங்குதல்**

2009 ஆம் ஆண்டு முதல் இன்று வரை நடைமுறையில் இருந்து வரும் ரன்விம அளிப்பு பத்திரம் தயாரிக்கும் நடைமுறைகள் விரைவாக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்துள்ளது. முன்னைய வருடங்களுடன் ஒப்பிடும்பொழுது காணி ஆணையாளர் நாயகத்தினூடாக அதிகளவான அளிப்பு பத்திரங்கள் வழங்குவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்தது. அதன்படி திருகோணமலை மாவட்டத்திற்கு 219 அளிப்பு பத்திரங்களும் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு 625 அளிப்பு பத்திரங்களும் அம்பாறை மாவட்டத்திற்கு 440 அளிப்பு பத்திரங்களும் வழங்கப்பட்டுள்ளது.

| இல | மாவட்டம் | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 (ஒக்டோபர் வரை) | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | திருகோணமலை | 189 | 65 | 106 | 349 | 185 | 219 | 1113 |
| 2 | மட்டக்களப்பு | 184 | 160 | 222 | 675 | 304 | 625 | 2170 |
| 3 | அம்பாறை | 193 | 118 | 209 | 598 | 366 | 440 | 1924 |
| **மொத்தம்** | | **566** | **343** | **537** | **1622** | **855** | **1284** | **5207** |

**காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரம் (LDO) வழங்குதல்.**

காணி அபிவிருத்தி கட்டளைச்சட்டதின் கீழ் 2015ம் ஆண்டில் திருகோணமலை மாவட்டத்தில் 2505 அனுமதிப்பத்திரங்களும், அம்பாறை மாவட்டத்தில் 821 அனுமதிப்பத்திரங்களும், மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 538 அனுமதிப்பத்திரங்களும் எமது திணைக்களத்தின் ஊடாக வழங்கப்பட்டது.

| தொ. இல | மாவட்டம் | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 ஒக்டோபர் வரை) | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | திருகோணமலை | 118 | 865 | 163 | 188 | 172 | 2505 | 4011 |
| 2 | மட்க்களப்பு | 193 | 337 | 1917 | 42 | 73 | 667 | 3229 |
| 3 | அம்பாறை | 50 | 176 | 42 | 123 | 58 | 947 | 1396 |
| **மொத்தம்** | | **361** | **1378** | **2122** | **353** | **303** | **4119** | **8636** |

**அரச காணிகள் சட்டத்தின் கீழ் நீண்டகாலக் குத்தகைப்பத்திரங்களை வழங்குதல்**

இதன் கீழ் 2015 ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணத்தில் 99.9641 ஹெக்டெயர் காணியானது நீண்ட காலக் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டது. அதனடிப்படையில் வியாபார நோக்கத்தின் கீழ் அதிகளவிலான குத்தகைப்பத்திரங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது, அது தவிர இவ்வருடத்தில் விவசாயத்திற்கென 30 ஹெக்டெயர் பரப்பளவிலான நிலத்திற்கு நீண்ட காலக் குத்தகை பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவற்றின் விபரம் வருமாறு இதன் கீழ் 2015 ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணத்தில் 294, நீண்டகால குத்தகைப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளது.

| தொடர் இல. | மாவட்டம் | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | திருகோணமலை | 32 | 15 | 10 | 11 | 07 | 32 | 107 |
| 2 | மடக்களப்பு | 14 | 12 | 13 | 03 | 07 | 235 | 284 |
| 3 | அம்பாறை | 04 | 06 | 14 | 14 | 05 | 27 | 70 |
| **மொத்தம்** | | **50** | **33** | **37** | **28** | **19** | **294** | **461** |

**அளிப்பு தொடர்பான செயற்பாடுகள் (2007/03 சுற்று நிருபத்திற்கு அமைவாக)**

2015 ஆம் ஆண்டில் 36 அளிப்புப் பத்திரங்கள் சீர்செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டது. முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது இது அதிகளவு வீதமாக காணப்படுகின்றது.

| தொடர் இல. | மாவட்டம் | இரத்துச் செய்யப்பட்டவை | பிழைதிருத்தம் செய்யப்பட்டவை | நிபந்தனைகள் இலகுவாக்கப்பட்டவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | திருகோணமலை | 59 | 15 | 12 | 86 |
| 2 | மடக்களப்பு | 69 | 15 | 45 | 129 |
| 3 | அம்பாறை | 32 | 6 | 8 | 46 |
| **மொத்தம்** | | **160** | **36** | **65** | **261** |

**2008/04 சுற்று நிருபத்திற்கமைய (2015 ஆம் வருடத்தில்) கிடைக்கபெற்ற விண்ணப்பங்கள் மற்றும் அனுமதி வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் தொடர்பான விபரங்கள் வருமாறு 2015**

| தொ. இல | மாவட்டம் | கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்களின் தொகை | அனுமதி வழங்கப்பட்ட காணிக் கச்சேரிகளின் எண்ணிக்கை கா.அ.க.ச (L.D.O) | அனுமதி வழங்கப்பட்ட காணிக் கச்சேரிகளின் தொகை (S.L.O) | அனுமதி வழங்கப்பட்டவர்களின் தொகை அ.கா.ச (S.L.O) | வழங்கப்பட்ட LC 144A படிவங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 01 | அம்பாறை | 994 | 47 | 02 | 03 | 821 |
| 02 | மட்டக்களப்பு | 22433 | 91 | - | - | 538 |
| 03 | திருகோணமலை | 5290 | 96 | 08 | 74 | 2252 |
| **மொத்தம்** | | **28717** | **234** | **10** | **77** | **3611** |

**கிழக்கு மாகாணத்தில் காணி தொடர்பான பிரச்சினைகளை சீர் செய்தல்**

2015 ஆம் ஆண்டில் திணைக்களத்தினால் கிழக்கு மாகாணத்தில் 81 காணிப் பிரச்சினைகள் சீர்செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவற்றின் விபரம் வருமாறு

| தொ. இல | மாவட்டம் | 2013 | | 2014 | | 2015 | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | முறைபீடுகளின் எண்ணிக்கை | தீர்வு காணப்பட்டவற்றின் எண்ணிக்கை | முறைபீடுகளின் எண்ணிக்கை | தீர்வு காணப்பட்டவற்றின் எண்ணிக்கை | முறைபீடுகளின் எண்ணிக்கை | தீர்வு காணப்பட்டவற்றின் எண்ணிக்கை | முறைபீடுகளின் எண்ணிக்கை | தீர்வு காணப்பட்டவற்றின் எண்ணிக்கை |
| 1 | திருகோணமலை | 113 | 38 | 158 | 48 | 61 | 28 | 332 | 114 |
| 2 | மட்டகளப்பு | 119 | 29 | 177 | 38 | 125 | 33 | 421 | 100 |
| 3 | அம்பாறை | 85 | 43 | 135 | 70 | 52 | 20 | 272 | 133 |
| | **மொத்தம்** | **317** | **110** | **470** | **156** | **238** | **81** | **1025** | **347** |

**அரச திணைக்களங்களுக்கு காணிகள் பகிர்ந்தளித்தல்**

2015 ஆம் ஆண்டில் அரச திணைக்களங்களுக்கு 77 காணித்துண்டங்கள் கிழக்கு மாகணத்தில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. அதில் அதிக காணிகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. அவற்றின் விபரம் வருமாறு

| தொ. இல. | மாவட்டம் | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | திருகோணமலை | 07 | 17 | 06 | 29 | 16 | 10 | 85 |
| 2 | மட்டக்களப்பு | 31 | 07 | 04 | 26 | 06 | 50 | 124 |
| 3 | அம்பாறை | 12 | 07 | 16 | 83 | 24 | 17 | 159 |
| **மொத்தம்** | | **50** | **31** | **26** | **138** | **46** | **77** | **368** |

**அரச காணிகளை பாராதீனப்படுத்தல்**

2015 ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணத்தில் 25 காணித்துண்டங்கள் மாகாணத்தில் பாராதீனப்படுத்தப்பட்டுள்ளது. அதில் 12 காணித்துண்டங்கள் திருகோணமலை மாவட்டத்தில் பாராதீனப்படுத்தப்பட்டுள்ளது.

அவற்றின் விபரம் வருமாறு

| தொ. இல. | மாவட்டம் | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | திருகோணமலை | 01 | - | 03 | 02 | 02 | 12 | 20 |
| 2 | மட்டக்களப்பு | 05 | 01 | 02 | 16 | 01 | 08 | 33 |
| 3 | அம்பாறை | 01 | 02 | - | 02 | 08 | 05 | 18 |
| **மொத்தம்** | | **07** | **03** | **05** | **20** | **11** | **25** | **71** |

**சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சலுகை அளிப்பு பத்திரங்களை வழங்குதல்**

2015 ஆம் வருடத்திலிருந்து இற்றைவரையான காலப்பகுதிக்குள் 349 சலுகை அளிப்புபத்திரங்கள் மாகாணத்திக்குள் சுனாமி அனர்த்த்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கிடையில் பகிர்ந்து கொடுக்கப்பட்டது

அவற்றின் விபரம் வருமாறு

| இல. | மாவட்டம் | 2008-2011 | 2012 | 2013 | 2014 | 2015 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | திருகோணமலை | - | - | 148 | 111 | 261 | 520 |
| 2 | மட்டக்களப்பு | 2253 | 110 | - | 46 | - | 2409 |
| 3 | அம்பாறை | 405 | 620 | 160 | 88 | 88 | 1361 |
| **மொத்தம்** | | **2658** | **730** | **308** | **245** | **349** | **4290** |

**நடமாடும் சேவைகள்**

கிழக்கு மாகாணத்தில் காணி நிருவாகத்தை மேம்படுத்தும் நோக்குடன் 2015 ம் ஆண்டில் அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களை மையமாக கொண்டு 19 நடமாடும் சேவைகள் நடாத்தப்பட்டது.

| தொ. இல. | மாவட்டம் | நடமாடும் சேவைகள் எண்ணிக்கை | கிடைக்கபெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தீர்வுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | திருகோணமலை | 01 | 08 | 07 |
| 2 | மட்டக்களப்பு | 11 | 395 | 315 |
| 3 | அம்பாறை | 07 | 411 | 357 |
| **மொத்தம்** | | **19** | **814** | **679** |

**நில அளவை நடவடிக்கைகள்**

2014 வருடத்துடன் ஒப்பிடும் போது 2015 ம் ஆண்டில் நில அளவை நடவடிக்கைகளில் முன்னேற்றம் காணப்பட்டது.

| தொ. இல. | மாவட்டம் | 2014 | | 2015 | |
|---|---|---|---|---|---|
| | | பெறப்பட்ட விண்ணப்பம் | வழங்கப்பட்ட வரைபடங்கள் | பெறப்பட்ட விண்ணப்பம் | வழங்கப்பட்ட வரைபடங்கள் |
| 1 | திருகோணமலை | 62 | 23 | 51 | 18 |
| 2 | அம்பாறை | - | - | 04 | 02 |
| **மொத்தம்** | | **62** | **23** | **55** | **20** |

**விம்சவிய வேலைத்திட்டம்**

கிழக்கு மாகாணத்தில் 4 பிரதேச செயலாளர் பிரிவுகளில் இச் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அம்பாறை, மண்முனை வடக்கு, திருகோணமலை பட்டினமும் சூழலும் மற்றும் தம்பலகாமம் ஆகிய பிரதேச செயலாளார் பிரிவுகளில் 2677 க்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் இத் திட்டத்தின் கீழ் பொது மக்களிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

| தொடர் இல. | மாவட்டம் | காணிக் கச்சேரி மூலம் தெரிவு செய்யப்பட்டவர் களின் தொகை | நடாத்தப்பட்ட காணிக் கச்சேரிகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட அனுமதிப்பத்தி ரங்களின் எண்ணிக்கை (L.D.O) | அனுமதி வழங்கப்பட வேண்டிய குத்தகை பத்திரங்களின் எண்ணிக்கை (S.L.O) |
|---|---|---|---|---|---|
| 1 | (பட்டணமும் சூழலும்) | 92 | 06 | 137 | 13 |
| 2 | மட்டக்களப்பு (மண்முனை வடக்கு) | 2461 | - | - | 363 |
| 3 | அம்பாறை | - | - | - | - |
| 4 | தம்பலகாமம் | 124 | 17 | 116 | 07 |
| **மொத்தம்** | | **2677** | **23** | **253** | **383** |

# மூலதன செலவும் வருடாந்த அமுலாக்கல் நிகழ்ச்சித் திட்டமும் - 2016

கிழக்கு மாகாண சபையின் 2016 ஆம் நிதியாண்டிற்கான வரவுசெலவுத் திட்டத்தில் இவ்வமைச்சிற்கான மூலதன செலவிற்காக 398.30 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனடிப்படையில் பிரமாண அடிப்படையிலான நன்கொடை (CBG) இற்கான நிதியாக 25.0 மில்லியன்ரூபாவும், மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை (PSDG) இற்கான நிதியாக 373.30 மில்லியன் ரூபாவும் இவ்வமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ளன.

| துறைகள் | CBG (ரூபா மில்லியன்) | PSDG (ரூபா மில்லியன்) | மொத்தம் |
|---|---|---|---|
| அமைச்சு | 9.0 | - | 9.0 |
| மகளிர் விவகாரம் | 3.0 | - | 3.0 |
| நீர்வழங்கல் | 3.0 | - | 3.0 |
| திறன் மற்றும் மனிதவலு | 2.0 | - | 2.0 |
| வீதி அபிவிருத்தி திணைக்களம் | 6.0 | 371.30 | 377.30 |
| காணி அபிவிருத்தி திணைக்களம் | 2.0 | 2.0 | 4.0 |
| **மொத்தம்** | **25.0** | **373.30** | **398.30** |

## வீதி அபிவிருத்தி அமைச்சு

எமது அமைச்சின் கீழ் நேரடியாக அமுல்படுத்தப்பட்டு வரும் திறன் மற்றும் மனிதவலு அபிவிருத்தி,மகளிர் விவகாரம் மற்றும் கிராமிய நீர்வழங்கல் ஆகிய துறைகளுக்கும் மற்றும் அமைச்சின் நடைமுறைச் செலவிற்குமாக பிரமாண அடிப்படையிலான நன்கொடை (CBG) நிதியின் கீழ் 17.0 மில்லியன் ரூபா 2016 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதற்கான திட்டங்கள் அனைத்தும் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன.

- **மகளிர் விவகாரம்**

கிழக்கு மாகாணத்தில் உள்ள பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கும் மற்றும் வேலைவாய்ப்பற்ற பெண்களை இனங்கண்டு அவர்களுக்கு சுயதொழில் பயிற்ச்சி நெறியினை வழங்குவதற்குமாக பிரமாண அடிப்படையிலான நன்கொடை (CBG) நிதியிலிருந்து 3.0 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- **திறன் மற்றும் மனித வலு அபிவிருத்தி**

2016 ஆம் நிதி ஆண்டில் இத் துறைக்காக பிரமாண அடிப்படையிலான நன்கொடை (CBG) நிதியிலிருந்து 2.0 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், இதனைக் கொண்டுவேலையற்ற இளைஞர் மற்றும் யுவதிகளுக்கு கைத்தொழில்சார் பயிற்ச்சி நெறிகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

- **நீர்வழங்கல் துறை**

2016 ஆம் நிதி ஆண்டில் நீர்வழங்கல் துறைக்காக பிரமாண அடிப்படையிலான நன்கொடை (CBG) நிதியிலிருந்து 3.0 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கிடைக்கப் பெற்ற நிதியினைக் கொண்டு பாதுகாப்பான குடிநீர்வசதி கிடைக்கப் பெறாத வறிய குடும்பங்களை மூன்று மாவட்டங்களிலும் இனங்கண்டு குடிநீர்வசதியினை எமது அமைச்சின் ஊடாக பெற்றுக் கொடுக்கப்படும் என்பதை இவ்விடத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## வீதி அபிவிருத்தித் திணைக்களம்

2016ஆம் ஆண்டுக்காக மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை (PSDG) நிதி மூலத்தின் கீழ் வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்காக 371.30 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது சனத்தொகை மற்றும் பிரதேச நிலப்பரப்பு போன்றவற்றை கருத்தில் கொண்டு மூன்று மாவட்டங்களுக்குமாக கீழ்வருமாறு பங்கீடு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதனை இச்சபைக்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.

| | | |
|---|---|---|
| அம்பாறை | - | 133.67 மில்லியன் |
| மட்டக்களப்பு | - | 144.80 மில்லியன் |
| திருகோணமலை | - | 92.83 மில்லியன் |

இதற்கு மேலதிகமாக பிரமாண அடிப்படையிலான நன்கொடை (CBG) நிதி மூலத்தின் கீழ் 6.0 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி ஒதுக்கீடுகளுக்கான திட்டங்கள் யாவும் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன என்பதனையும் இங்கு கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

# காணி மற்றும் காணி அபிவிருத்தித் திணைக்களம்

2016ஆம் ஆண்டுக்காக மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை (PSDG) நிதி மூலத்தின் கீழ் காணி அபிவிருத்தி திணைக்களத்திற்காக 2.00 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது சனத்தொகை மற்றும் பிரதேச நிலப்பரப்பு போன்றவற்றை கருத்தில் கொண்டு மூன்று மாவட்டங்களுக்குமாக கீழ்வருமாறு பங்கீடு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதனை இச்சபைக்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.

| | | |
|---|---|---|
| அம்பாறை | - | 0.72 மில்லியன் |
| மட்டக்களப்பு | - | 0.78 மில்லியன் |
| திருகோணமலை | - | 0.50 மில்லியன் |

இதற்கு மேலதிகமாக பிரமாண அடிப்படையிலான நன்கொடை (CBG) நிதி மூலத்தின் கீழ் 2.0 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் காணி அபிவிருத்தித் திணைக்களத்திற்கு மொத்தமாக 4.0 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2016ம் வருடத்தில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய செயற்றிட்டங்கள்

2016ம் வருடத்தில் நடைமுறைப்படுத்த வேண்டிய செயற்றிட்டங்களின் விபரம் வருமாறு:-

| தொ இல | செயற்பாடுகள் | மாவட்டங்கள் | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | | அம்பாறை | திருகோணமலை | மட்டக்களப்பு | |
| 1 | ரன்விம அளிப்பு பத்திரம் தயாரித்தல் | 200 | 200 | 527 | 927 |
| 2 | நீண்ட கால குத்தகை வழங்கல் | 50 | 60 | 1026 | 1136 |
| 3 | காணி ஆணையாளர் நாயகத்தின் 2008/4 சுற்றறிக்கையின் கீழ் காணி பகிர்ந்தளித்தல | 6588 | 6000 | 11190 | 23778 |
| 4 | அரச காணிகள் சட்டத்தின் கீழ் திணைக்களங்களின் தேவைகளுக்கு காணி வழங்குதல் | 20 | 30 | 89 | 139 |
| 5 | உள்ளூராட்சி நிறுவனங்களின் தேவைகளுக்கு காணி வழங்குதல | 10 | 07 | 51 | 68 |
| 6 | மதவழிபாட்டுத் தலங்களுக்கு காணி வழங்குதல் | 05 | 10 | 01 | 16 |
| 7 | சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விசேட இலவச அளிப்பு பத்திரங்கள் வழங்குதல் | 534 | 300 | 00 | 834 |

**கௌரவ தவிசாளர் அவர்களே,**

மேலே என்னால் சொல்லப்பட்ட செயற்பாட்டுத் திட்டங்கள் யாவும் 2014 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டு 2015 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தில் உள்ளடங்கிய திட்டங்களும் மற்றும் வெளிநாட்டு உதவி வழங்கும் நிறுவனங்களின் நிதி ஒதுக்கீட்டின் கீழும் மற்றும் மத்திய அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழும் செயற்படுத்தப்பட்ட திட்டங்களுமாகும். இவ்வமைச்சும் மற்றும் இவ்வமைச்சின் கீழுள்ள இரண்டு நிறுவனங்களும் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட செயற்திட்டங்களை மிகவும் வெற்றிகரமான முறையில் நடைமுறைப்படுத்தி வருகின்றன.

கிழக்கு மாகாணத்தில் தற்போது பாரியளவிலான அபிவிருத்திச் சூழலை ஏற்படுத்தி உன்னத வளர்ச்சியை கிழக்கு மாகாணம் அடைந்து வருவதற்கு உதவிகளையும் ஒத்தாசைகளையும் வழங்கிக்கொண்டிருக்கும் அதி உத்தம ஜனாதிபதி மைத்திரி பாலசிறிசேன அவர்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றி கூற கடமைப்பட்டிருக்கின்றேன்.

எமது அமைச்சின் கீழுள்ள அபிவிருத்தித்திட்ட முன்மொழிவுகளுக்கும் அவற்றை பெறுபேறு நோக்கிய வகையில் செயற்படுத்துவதற்கும் தனது ஆலோசனைகளையும் பங்களிப்புக்களையும் வழங்கி வரும் கிழக்கு மாகாண கௌரவ ஆளுனர் ஒஸ்டின் பெர்னாண்டோஅவர்களுக்கும், கிழக்கு மாகாண கௌரவ முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமத்அவர்களுக்கும், கிழக்கு மாகாண சபையின் தவிசாளர் கௌரவ எ.பி.கலபதிகே சந்திரதாஸ அவர்களுக்கும், கௌரவ அமைச்சர்கள், கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் கௌரவ கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கும் நான் மீண்டும் நன்றி கூறிக்கொள்வதோடு கிழக்கு மாகாண பிரதம செயலாளர் திரு.டி.எம்.சரத் அபேகுணவர்தன அவர்களுக்கும், எமது அமைச்சின் செயலாளர் திருமதி.ஜெ.ஜெ.முரளிதரன் அவர்களுக்கும், ஏனைய அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) திரு.எஸ்.குமரகுரு,

பிரதிப் பிரதம செயலாளர் (திட்டமிடல்) திரு.வி.மகேந்திரராஜா, பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) ஏ.எச்.எம்.அன்ஷார், பிரதிப் பிரதம செயலாளர் (பொறியியல் சேவைகள்) எந்திரி.கே.பாஸ்கரதாஸ், பிரதிப் பிரதம செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) திருமதி. கலாமதி பத்மராஜா அவர்களுக்கும், அத்துடன் அமைச்சின் உதவிச் செயலாளர் டி.எம்.ஆர்.சி.தசநாயக, பிரதமகணக்காளர் திரு.சி.சுந்தரமூர்த்தி, திட்டமிடல் பணிப்பாளர் திரு.ஐ.யு.கே.செனவிரத்ன மற்றும் உத்தியோகத்தர்களுக்கும், எமது அமைச்சின் கீழுள்ள திணைக்களத் தலைவர்களான வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் எந்திரி.வி.மகிந்தன் அவர்களுக்கும், மற்றும் வீதி அபிவிருத்தித் திணைக்களங்களைச் சேர்ந்த பிரதிப் பணிப்பாளர், பிரதம பொறியியலாளர்கள், நிறைவேற்றுப் பொறியியலாளர்கள், கணக்காளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் அனைவருக்கும், காணி மற்றும் காணி நிர்வாகத் திணைக்களத்தின் மாகாண ஆணையாளர் திரு.எச்.இ.எம்.டபிள்டயூ.ஜீ.திசாநாயக அவர்களுக்கும், மற்றும் காணி நிர்வாகத் திணைக்களத்தின் உதவி ஆணையாளர்கள், கணக்காளர் மற்றும் ஏனைய அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

2016 ஆம் ஆண்டு நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ள அனைத்துத் திட்டங்களையும் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு தங்கள் அனைவரினதும் ஒத்துழைப்புக்களையும் வழங்கியுதவுமாறு அனைவரையும் அன்புடன் கேட்டு விடைபெறுகின்றேன்.

நன்றி

## நீர்வழங்கல் துறை

**குடிநீர் கிணறு வழங்கப்பட்ட சில பயனாளிகள்**










# திறன் மற்றும் மனிதவலு அபிவிருத்தி

## பனைக்கைத்தொழில் பயிற்சி






## தையல் பயிற்சி









**விசேட அபிவிருத்தித் திட்டம் (CBG) - சில பயனாளிகள்…**




சுழற்ச்சிக்கடன் விநியோகம்




விவசாய அமைப்புக்கு விவசாய உபகரணம் வழங்குதல்




பதிவு செய்யப்பட்ட அமைப்புக்கு கதிரைகளும் தகரங்களும் வழங்குதல்




பாடசாலைகளுக்கு வாத்திய கருவிகள் வழங்குதல்

# வீதி அபிவிருத்தித் திணைக்களம்

## 1. மாகாணக் குறித்தொதுக்கப்பட்ட நிதி (PSDG)




தமண பதகொட பல்லனோயா வீதி – அம்பாறை மீராவோடை – கல்வெட்டு




காத்தான்குடி மீன்பிடி வீதி வந்தாறுமூலை அடைவு வீதி




கந்தளாய் வானல வீதி

## 2. பிரமாண அடிப்படையிலான நன்கொடை நிதி (CBG)

**வீதி அபிவிருத்தித் திணைக்கள உப அலுவலகத்தின் சில படங்கள்:**









## 3. மீண்டெழும் வீதிப்பராமரிப்பு (Recurrent Road Works)



புத்தகல பன்சல வீதி – அம்பாறை



அம்பாறை அடைவுவீதி



ரஜவெவ வீதி திருத்தம்



கட்டைபறிச்சான் வீதி திருத்தம், மூதூர்



L.B. சனல் வீதி - திருகோணமலை



P.K.T வீதி, திருகோணமலை



செல்வநாயகபுரம் வீதி – திருகோணமலை



கந்தளாய் வென்ராசபுர வீதி திருத்தம்

## 4. உலக வங்கி நிதி (World Bank)

**அம்பாறை மாவட்டத்தில் புனர்நிர்மானம் செய்யப்பட்ட வீதிகளின் படங்கள்…..**



விளினயடி வீதி



மணல் ஹிஜ்ரா வீதி



கடற்கரை வீதி



காதிரிய வீதி





மல்வத்தை சுரிப்போடை வீதி